# வணிகக்கல்வி

# வணிகத்தின் பரம்பல்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

**தேர்ச்சி : 1.0** வணிக அடிப்படைகளையும் வணிகங்கள் செயற்படுகின்ற சூழலையும் தேடியறிவார்.

**தேர்ச்சி மட்டம் : 1.2** வணிகங்களது பரம்பலையும் அதன் போக்குகளையும் அறிந்து கொள்வார்.

## வணிகத்தின் பரம்பல்



**வணிகப் பரம்பலின் முதலாவது சந்தர்ப்பம்**

- **சுய தேவை பூர்த்தி முறை (நேர் உற்பத்தி)** – தனக்கு தேவையானவற்றை தானே உற்பத்தி செய்தல்.
- **தனி நபர் சிறப்பு தேர்ச்சி** – ஒவ்வொரு நபர்களும், குழுக்களும் அவர்களுக்கே உரித்தான விசேடமான உற்பத்தியொன்றை மேற்கொள்ளல்.
- **மிகை உற்பத்தி** – தனி நபர் சிறப்பு தேர்ச்சியின் காரணமாக மிகை உற்பத்தி ஏற்படல்.
- **பண்டமாற்று முறை** – மிகை உற்பத்தியினை மற்றோர் மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தல்.

**பண்டமாற்று முறையுடன் வியாபாரம், நேரில் உற்பத்தி என்பவை தோன்றியது.**

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : ………………………………..……., ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம் (மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk






## பண்டமாற்று முறை




மிகை உற்பத்தியினை மற்றோர் மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தல் பண்டமாற்று முறை எனப்படும். அதாவது ஒரு பண்டத்தினை கொடுத்து (பொருள் அல்லது சேவை) அதற்காக இன்னோர் பண்டத்தினை (பொருள் அல்லது சேவை) பெற்றுக்கொள்ளல் பண்டமாற்று ஆகும்.

உதாரணம் :

நெல்லினை கொடுத்து தேங்காய் கொள்வனவு செய்தல்.








Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பண்டமாற்று முறையின் குறைபாடுகள் அல்லது வரையறைகள் (Limitation of barter systems)

**01**

இரட்டை பொருந்துகை இன்மை.




**04**

கொண்டு செல்வதில் சிரமம்.

**02**

பொதுவான கணிப்பீட்டு சாதனம் இன்மை.



**05**

சேமிப்பதில் சிரமம்.

**03**

சிறிய அலகுகளாக பிரிபடாத்தன்மை.



**06**

பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாமை.



Copyright www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## வியாபாரம் (Trade)

கொள்வனவு, விற்பனை ஆகிய தொழிற்பாடுகள் மூலம் பொருட்கள், சேவைகளின் **உரிமை மாற்றம்** இடம்பெறும் செயற்பாடு வியாபாரம் ஆகும். வியாபாரம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணம் பண்டமாற்று ஆகும்

## நேரில் உற்பத்தி (Indirect production)

பிறரின் தேவைக்காக மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்தி அல்லது சந்தைத் தேவைக்கான உற்பத்தி நேரில் உற்பத்தி ஆகும்.

இது பரிமாற்றத்தினை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்தி ஆகும்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk




## பணப் பயன்பாடு

பண்டமாற்று முறையில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு பணம் பயன்படுத்தப்பட்டது.

இம் முறையில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பரிமாற்று ஊடகமாக பல்வேறு பொருட்கள் பணமாகப் பயன்படுத்தப்பட்டன.


**“பொருட்கள் சேவைகளை பரிமாற்றுவதற்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் எந்த ஒரு பொதுவான ஊடகமும்” பணமாகும்.**

தொகுப்பு : ……………………………..………., ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம் (மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


# பணப் பயன்பாட்டின் வளர்ச்சி படிமுறை






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk








## 1. பொருட் பயன்பாடு

பணமாகப் பொருள் பயன்படுத்தப்படல்

உதாரணம் :

புகையிலை, சிப்பி



## 2. உலோக வகைப் பயன்பாடு

உலோகப் பொருட்கள் பணமாக பயன்படுத்தப்படல்

உதாரணம் :

தங்கம், வெள்ளி



## 3. உலோக நாணயப் பயன்பாடு

பல்வேறு அளவுகளைக் கொண்ட உலோகத் துண்டுகளின் முகப்பில் குறிப்பிட்ட பெறுமானம் குறிப்பிடப்படும்.

பிற்காலத்தில் அச்சிடப்பட்ட நாணயங்களுக்கு அடிப்படையாக அமைந்தது.

Copyright www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk






## 4. நாணயம், நாணயத் தாள்களின் பயன்பாடு

பெறுமதி கூடிய உலோகத் துண்டுகளை பயன்படுத்துவதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக நாணயங்கள் பாவனைக்கு உட்படுத்தப்பட்டன.


அரசின் அதிகாரம் பெற்ற அதிகாரியினால் வெளியிடப்படும் தாள், குற்றி நாணயங்கள் இவையாகும்.

உதாரணம் : இலங்கை, இந்தியா - ரூபா , யப்பான் - யென் , மலேசியா - றிங்கிற் , ஐரோப்பிய நாடுகள் - யூரோ




## 5. வங்கிப் பணப் பயன்பாடு

வங்கி நடைமுறைக் கணக்குடன் தொடர்புடைய காசோலைப் பயன்பாடு










## 6. இலத்திரனியல் பணப் பயன்பாடு

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் எண்மானத் தொழில்நுட்ப விருத்தியுடன் அறிமுகப்படுத்தப்பட்ட கணினி-மயப்படுத்தப்பட்ட வலையமைப்பின் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும் முறையினைக் குறிக்கும்.

உதாரணம் :
- வரவட்டை
- கடனட்டை
- முற்பண கொடுப்பனவு அட்டை
- நுண்சில்லு / நகரும் பணப் பரிமாற்ற முறை (Microchips/ Mobile cash)







Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வணிகப் பரம்பலின் மூன்றாவது சந்தர்ப்பம் → கைத்தொழில் புரட்சி → வங்கி, போக்குவரத்து, காப்புறுதி, தொடர்பாடல், களஞ்சியப்படுத்தல் போன்ற துணைச் சேவைகளின் வளர்ச்சி

## கைத்தொழில் புரட்சி (Industrial Revolution)

மனித சக்திக்குப் பதிலாக இயந்திர சக்தியினை பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் முறையின் வருகையே கைத்தொழில் புரட்சியாகும். 18ம் நூற்றாண்டளவில் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி காரணமாக அதுவரையில் காணப்பட்ட குடிசைக் கைத்தொழில்கள் பாரியளவு கைத்தொழில்கள் எனும் நிலைக்கு மாற்றமடைந்தது. கைத்தொழில் புரட்சி காரணமாக வியாபாரம் விரிவடைந்தது.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கைத்தொழில் புரட்சியின் காரணமாக உற்பத்தி நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

⇒ உற்பத்தி நடவடிக்கைகளுக்கு மனித சக்திக்குப் பதிலாக இயந்திர சக்திகள் பயன்படுத்தப்பட்டமை.

⇒ குடிசைக் கைத்தொழில்கள், தொழிற்சாலைக் கைத்தொழில்களாக மாற்றம் அடைந்தமை.

⇒ தன்னியக்க இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை.

⇒ பேரளவு உற்பத்தி, தொழிற்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி போன்றன பாரியளவில் வளர்ச்சியடைந்தமை.

## கைத்தொழில் புரட்சியின் காரணமாக வர்த்தகத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்

⇒ உள்ளூர் வர்த்தக நடவடிக்கைகள், உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளாக விரிவடைந்தமை.

⇒ உள்நாட்டு வர்த்தகம், சர்வதேச வர்த்தகமாக விரிவடைந்தமை.


⇒ இடை நடுவர்கள் மூலமான விநியோக முறைகள் பாரியளவில் வளர்ச்சியடைந்தமை.

⇒ வியாபாரத் துணைச் சேவைகள் பாரியளவில் வளர்ச்சியடைந்தமை.

⇒ விளம்பரம், விற்பனை, மேம்படுத்தல் நடவடிக்கைகள் பாரியளவில் வளர்ச்சியடைந்தமை.

தொகுப்பு : ………………………..……., ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம் (மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk






தொகுப்பு : ………………………………………., ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம் (மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# வர்த்தகம்
# (Commerce)

வியாபாரம் மற்றும் துணைச் சேவைகள் என்பவற்றின் சேர்க்கை வர்த்தகம் எனப்படும்.

**வர்த்தகம் = வியாபாரம் + துணைச்சேவைகள்**

- **வர்த்தகம்**
  - **வியாபாரம்**
    - உள்நாட்டு வியாபாரம்
      - சில்லறை வியாபாரம்
      - மொத்த வியாபாரம்
    - வெளிநாட்டு வியாபாரம்
      - ஏற்றுமதி வியாபாரம்
      - இறக்குமதி வியாபாரம்
  - **துணைச்சேவைகள்**
    - வங்கி
    - போக்குவரத்து
    - தொடர்பாடல்
    - காப்புறுதி
    - களஞ்சியப்படுத்தல்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : ..........................……..., ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம் (மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வணிகப் பரம்பலின் நான்காவது சந்தர்ப்பம்

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி

இலத்திரனியல் வணிகம்
E - Business

இலத்திரனியல் வர்த்தகம்
E - Commerce



## தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி

கணனி தொழில்நுட்பம், தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த வளர்ச்சி காரணமாக தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்தது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக வணிக நடவடிக்கைகள் இலகுவாக்கப்பட்டுள்ளதுடன் பாரியளவில் உலகலாவிய ரீதியில் விரிவடைந்து செல்கின்றது.

இலத்திரனியல் வர்த்தகத்தையும், இலத்திரனியல் வணிகத்தையும் அடிப்படையாகக் கொண்ட தகவல் தொழில்நுட்ப யுகமே தற்போது காணப்படுகின்றது.



Copyright www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk





## இலத்திரனியல் வணிகம் E - Business

வணிகத்திற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் வலையமைப்பினூடாக மேற்கொள்ளப்படுவது இலத்திரனியல் வணிகம் எனப்படும்.



## இலத்திரனியல் வர்த்தகம் E - Commerce

வலையமைப்பினூடான கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகள் இடம்பெறுவது இலத்திரனியல் வர்த்தகம் எனப்படும்.




Copyright e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk
















Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : ……………………………...……..., ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம் (மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## Making it easy to do business by automating & streaming processes across the value chain





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# நிகழ் காலத்தில் இலத்திரனியல் வர்த்தகம் பிரபல்யமடைவதில் தாக்கம் செலுத்திய காரணிகள்

- ⇒ எழுத்தவாணங்களின்றி வணிகத் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்ளமுடிதல்.
- ⇒ வணிக நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளமுடிதல்.
- ⇒ செயற்பாட்டுக் கிரயம், இருப்புக் கிரயம் என்பன குறைவடைதல்.
- ⇒ பூகோளமய ரீதியான சந்தையொன்றிற்கான சந்தர்ப்பம் உருவாதல்.
- ⇒ பொருட்கள் சேவைகளது தரம் உயர்வடைதல்.
- ⇒ வாடிக்கையாளர்களது சிரமங்கள் குறைவடைவதுடன் நேரம் சேமிக்கப்படுதல்.
- ⇒ கணினி அறிவு அதிகரித்தல்
- ⇒ உட்கட்டமைப்பு வசதிகள் அதிகரித்தல்.




தொகுப்பு : ……………………………..……., ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம் (மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக வணிகத்துறையில் ஏற்பட்ட நவீன போக்குகள்**

- இலத்திரனியல் பணம் பாவனைக்கு வருதல்
- பூகோளமயமாக்கல் விரிவடைதல்
- இலத்திரனியல் வணிகம் உருவாதல்
- வணிகங்களின் சமூகப் பொறுப்பு தொடர்பாக கவனம் அதிகரித்தல்
- சூழல் தொடர்பான அவதானம்



தொகுப்பு : ………………………..……..., ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம் (மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Note :

## வணிகம் வர்த்தகம் வியாபாரம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு

⇒ பொருட்கள் சேவைகளின் உரிமையினை மாற்றுவதற்காக இடம்பெறுகின்ற கொள்வனவு விற்பனை போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கியது வியாபாரம் ஆகும்.

⇒ வியாபாரத்துடன் வியாபாரத் துணைச் சேவைகளையும் உள்ளடக்கியது வர்த்தகம் ஆகும்.

⇒ வர்த்தக நடவடிக்கைகளுடன் உற்பத்தி தொழிற்பாடுகளையும் உள்ளடக்கிய பரந்த நடவடிக்கையே வணிகம் ஆகும்.

எனவே வர்த்தகத்தின் பிரிவாகிய வியாபாரம் மற்றும் துணைநிலைச் சேவைகளைம், வர்த்தகம், உற்பத்தி என்பவற்றை உள்ளடக்கிய பரந்த நடவடிக்கையாக வணிகம் காணப்படுகின்றது. அதாவது வணிகத்துக்குள் வர்த்தகம், உற்பத்தி, வியாபாரம் ஆகியவை உள்ளடங்குகின்றன.




தொகுப்பு : ……………………………..……., ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம் (மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்)
கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



- வணிகம்
  - உற்பத்தி
  - வர்த்தகம்
    - வியாபாரம்
      - உள்நாட்டு வியாபாரம்
        - சில்லறை வியாபாரம்
        - மொத்த வியாபாரம்
      - வெளிநாட்டு வியாபாரம்
        - ஏற்றுமதி வியாபாரம்
        - இறக்குமதி வியாபாரம்
    - துணைநிலைச் சேவைகள்
      - வங்கி
      - போக்குவரத்து
      - தொடர்பாடல்
      - காப்புறுதி
      - களஞ்சியப்படுத்தல்




தொகுப்பு : ………………………..…….., ஆசிரிய ஆலோசகர் - வர்த்தகம் (மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk